ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| திகதி | 2022.01.20 |

**நாணயக்கொள்கை மீளாய்வு: இல. 01 - 2022 சனவரி**

## இலங்கை மத்திய வங்கியானது பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டை பலப்படுத்துவதற்கு மேலதிக கொள்கை வழிமுறைகளை பின்பற்றுகின்றது

### பொருளாதார நடவடிக்கையானது தற்காலிக பின்னடைவொன்றினைத் தொடர்ந்து படிப்படியானதொரு மீட்சியினைப் பதிவுசெய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட தரவுகளின் பிரகாரம், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மூன்றாம் அலையின் தோற்றப்பாடு மற்றும் அதனுடன் தொடர்புடைய தணிப்பு வழிமுறைகளுடன் இடையூறுக்குள்ளான உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கையானது 2021இன் மூன்றாம் காலாண்டுப் பகுதியில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 1.5 சதவீதத்தினால் சுருக்கமடைந்துள்ளதென மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும், பல்வேறு முன்னணிக் குறிகாட்டிகள் அரசாங்கத்தின் வெற்றிகரமான தடுப்பூசியேற்றும் செயற்றிட்ட முன்னெடுப்புக்களின் காரணமாக பொருளாதார நடவடிக்கைகள் இயல்பு நிலைமைக்குத் திரும்பியுள்ளமையினை சுட்டிக்காட்டியுள்ளமையினால் 2021இன் பிற்பகுதியில் பொருளாதார நடவடிக்கைகள் உத்வேகமடைந்துள்ளதாகத் தென்படுகின்றது. இதற்கமைய, பொருளாதாரமானது 2021இல் ஏறத்தாழ 4.0 சதவீத வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

### வெளிநாட்டுத்துறையானது அதிகரித்த சவால்களுக்கு மத்தியில் தொடர்ந்தும் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையினைக் கொண்டுள்ளது

உலகளாவிய பொருளாதார நடவடிக்கைகளின் இயல்பு நிலைக்குத் திரும்பலுடன் 2021 யூன் தொடக்கம் தொடர்ச்சியாக ஐ.அ.டொலர் 1 பில்லியனை விஞ்சிய மாதாந்த ஏற்றுமதிகளுடன் ஏற்றுமதிச் செயலாற்றத்தில் குறிப்பிடத்தக்கதொரு முன்னேற்றம் அவதானிக்கப்பட்டிருந்தது. அதேவேளை, அதிகரித்த பன்னாட்டு விலைகளையும் இடைநிலைப் பொருட்களுக்கான கேள்வியினையும் மற்றும் எதிர்பார்க்கப்பட்டதினைக் காட்டிலும் அதிகளவில் காணப்பட்ட நுகர்வுப் பொருட்களுக்கான கேள்வியினையும் பகுதியளவில் பிரதிபலித்து இறக்குமதிகள் மீதான செலவினம் குறிப்பிடத்தக்களவு அதிகரித்திருந்தது. இறக்குமதிகள் தாழ்ந்த செலவுடன் கூடிய கொடுகடன் கிடைப்பனவிலும் துணையளிக்கப்பட்டு அதிகரித்தமையானது வர்த்தகப் பற்றாக்குறை 2021இல் உலகளாவிய நோய்த்தொற்றிற்கு முன்னைய மட்டங்களுக்கு விரிவடைவதற்குக் காரணமாயமைந்திருந்தது. அதேவேளை, அண்மைய மாதங்களில் அவதானிக்கப்பட்ட சுற்றுலாப் பயணிகளின் உள்வருகைகளுடன் சுற்றுலாத்துறையின் அபிவிருத்திகள் உறுதியளிப்பதாக தென்படுகின்றது. தொழிலாளர் பணவனுப்பல்களின் வடிவிலான உட்பாய்ச்சல்கள் 2021இன் பின்னரைப் பகுதியில் ஓரளவு குறைவடைந்திருந்திருப்பினும், விசேட ஊக்குவிப்புச் செயற்றிட்டங்களின் அறிமுகம் மற்றும் சட்டவிரோத நிதிப் பரிமாற்றல்களைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்பன முறைசார் வழிகளினூடாக நிதியனுப்பல்களை மேற்கொள்வதில் புத்துயிர்பெற்ற ஆர்வத்தினைத்

தோற்றுவித்துள்ளன. 2021இல் இலங்கை ரூபாவானது ஐ.அ.டொலருக்கெதிராக 7.0 சதவீதத்தினால் தேய்வடைந்திருந்ததுடன் 2022இன் இதுவரையான காலப்பகுதியில் பரந்தளவில் நிலையாகக் காணப்பட்டுள்ளது. அதேநேரம், மத்திய வங்கியானது 2022 சனவரி 18ஆந் திகதியன்று செலுத்தப்பட வேண்டியிருந்த ஐ.அ.டொலர் 500 மில்லியன் கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிக்கான தீர்ப்பனவினை உரிய நேரத்தில் பூர்த்திசெய்வதற்கான இயலுமையினைக் கொண்டிருந்தது. 2021 இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 3.1 பில்லியனாக மதிப்பிடப்பட்டிருந்தது.

**தனியார் துறைக்கான கொடுகடன் பாய்ச்சல்கள் தொடர்ந்தும் விரிவடைந்திருந்தன**

2021 செத்தெம்பர் மற்றும் ஒத்தோபர் மாத காலப்பகுதியில் மெதுவடைந்திருந்த தனியார் துறைக்கான கொடுகடனானது அண்மையில் அதிகரித்திருந்ததுடன் இது நிதியியல் இறக்குமதிகளுக்கான அதிகரித்த கொடுகடன் பாய்ச்சல்களைப் பகுதியளவில் பிரதிபலித்திருந்தது. அதேநேரம், வங்கித்தொழில் முறைமையிடமிருந்து அரசதுறை பெற்றுக்கொண்ட கொடுகடனானது, குறிப்பாக அரசிற்கான தேறிய கொடுகடனானது, தொடர்ந்தும் விரிவடைந்திருந்தது. வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக அண்மையில் மெதுவடைவொன்று அவதானிக்கப்பட்ட போதும் உள்நாட்டுக் கொடுகடனில் குறிப்பிடத்தக்க விரிவாக்கத்துடன் விரிந்த பணத்தின் ($M_{2b}$) வளர்ச்சியானது 2021 நவெம்பர் இறுதியளவில் உயர்வடைந்திருந்தது. அதேவேளை, பெரும்பாலான சந்தைக் கடன்வழங்கல் வீதங்கள் மேல்நோக்கி சீராக்கப்பட்டுள்ள வேளையில், வைப்பு வீதங்களும் குறைந்த வேகத்திலேனும் அதிகரிக்கப்பட்டுள்ளன. மேலும், அரச பிணையங்களுக்கான முதலாந்தர ஏலங்களில் மேம்பட்ட கோரிக்கைகளுக்கு மத்தியில் அரச பிணையங்கள் மீதான விளைவு வீதங்களும் அதிகரித்துள்ளன.

**கேள்வி அழுத்தங்களின் சாத்தியமான சமிக்ஞைகளுக்கு மத்தியில் நிரம்பல் பக்க காரணிகள் விலை அழுத்தங்களின் பிரதான உந்து சக்தியாகத் தொடர்ந்தும் காணப்படுகின்றன**

பணவீக்க அழுத்தங்களானது நிரம்பல் பக்க இடையூறுகள், நிருவகிப்பட்ட உள்நாட்டு விலைகளுக்கான மேல்நோக்கிய சீராக்கங்கள் மற்றும் மையப் பணவீக்கத்தின் அதிகரிப்பில் பிரதிபலிக்கப்பட்டவாறான பொருளாதாரத்தின் உள்ளார்ந்த கேள்வி நிலைமைகளின் வலுப்படுத்தல்கள் என்பவற்றினால் தூண்டப்பட்டிருந்தது. அத்தகைய நிரம்பலினால் உந்தப்பட்ட விலை அழுத்தங்கள் தற்காலிகமானதாக அமையுமென எதிர்பார்க்கப்படுகின்ற போதும் கேள்வியினால் உந்தப்பட்டு தொடர்ந்தும் காணப்படக்கூடிய பணவீக்க அழுத்தங்களின் சாத்தியமான கட்டியெழுப்பலானது முற்கூட்டிய நாணயக்கொள்கை வழிமுறைகளின் பின்பற்றுதலைக் கட்டாயப்படுத்தலாம் என்பதுடன் இது பணவீக்க எதிர்பார்க்கைகளை முகாமை செய்யவும் துணைபுரியும்.

**நாணய மற்றும் ஏனைய கொள்கை வழிமுறைகள் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினை வலுப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது**

தற்போதுள்ள மற்றும் எதிர்பார்க்கப்பட்ட பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகளை பரிசீலனையிற்கொண்டு, இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையானது 2022 சனவரி 19ஆம் நாளன்று இடம்பெற்ற அதனது கூட்டத்தில் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினை வலுப்படுத்தும்

நோக்குடன் பல்வேறு கொள்கை வழிமுறைகளை மேற்கொள்வதற்குத் தீர்மானித்தது. அதற்கமைய, நாணயச்சபையானது பின்வரும் தீர்மானங்களை மேற்கொண்டிருந்தது.

அ) மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினையும் முறையே 5.50 சதவீதத்திற்கும் 6.50 சதவீதத்திற்கும் ஒவ்வொன்றையும் 50 அடிப்படைப் புள்ளிகளால் அதிகரித்தல்;

ஆ) எரிபொருள் கொள்வனவுகளுக்காக அத்தியாவசிய இறக்குமதிப் பட்டியல்களின் நிதியிடலை உரிமம்பெற்ற வங்கிகளின் வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களுக்கு விகிதசமமாக அவ்வங்கிகளுக்கிடையில் பகிர்ந்தளித்தல்;

இ) அனைத்துப் பதிவுசெய்யப்பட்ட சுற்றுலாப்பயணி நிறுவனங்களும் இலங்கைக்கு வெளியில் வதிகின்ற ஆட்களுக்கு வழங்கப்படும் பணிகள் தொடர்பில் வெளிநாட்டுச் செலாவணியை மாத்திரம் ஏற்றுக்கொள்வதனைக் கட்டாயமாக்குதல்;

ஈ) ''உள்முக தொழிலாளர் பணவனுப்பல்கள் மீதான ஊக்குவிப்புத் திட்டம்'' என்ற திட்டத்தின் கீழ் ஐ.அ.டொலர் ஒன்றிற்கு வழங்கப்படும் ரூ.2.00 ஊக்குவிப்புத் தொகைக்கு மேலதிகமாக தொழிலாளர் பணவனுப்பல்களுக்காகக் கொடுப்பனவுசெய்யப்படும் ஐ.அ.டொலர் ஒன்றிற்கு மேலதிகமாக ரூ.8.00 கொடுப்பனவை வழங்குவதனை 2022 ஏப்பிறல் 30 வரை நீடித்தல், 2022 பெப்புருவரி 01 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் உரிமம்பெற்ற வங்கிகள் அத்துடன் ஏனைய முறைசார் வழிகளூடாக ரூபாய்க் கணக்குகளுக்கு பணம் அனுப்பப்படுகின்ற போது பரிமாற்றல் ஒன்றிற்கு ரூ.1,000 கொடுப்பனவு செய்வதன் மூலம் புலம்பெயர் இலங்கைத் தொழிலாளர்களுக்கு ஏற்படும் பணப் பரிமாற்றல் செலவினை மீளளித்தல் அத்துடன் புலம்பெயர் தொழிலாளர்களின் வெளிநாட்டு நாணய மற்றும் ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட வைப்புகள் இரண்டிற்கும் உயர்வான வட்டி வீதங்களை அறிமுகப்படுத்தல்.

மேற்குறித்த வழிமுறைகள் பொருளாதாரத்தில் காணப்படும் அடிப்படையான கேள்வி அழுத்தங்களின் சாத்தியமான அதிகரிப்பினைக் குறைவடையச்செய்வதுடன் இது வெளிநாட்டுத் துறை மீதான அழுத்தங்களைத் தளர்த்துவதற்கு உதவியளிப்பதன் ஊடாக பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினை பாரியளவில் ஊக்குவிக்குமென நாணயச்சபை கருத்திற்கொண்டிருந்தது. இக்கொள்கை நிலைப்பாட்டிற்கமைய, மத்திய வங்கியானது வட்டி வீதங்களில், குறிப்பாக வைப்பு வீதங்களில், நேரொத்த அதிகரிப்பினையும் அதனூடாக சேமிப்புக்களை ஊக்குவிக்கின்ற அதேவேளை மிதமிஞ்சிய நுகர்வினை ஊக்கமிழக்கச் செய்வதனையும் எதிர்பார்க்கின்றது. இது இறக்குமதிகளையும் குறைவடையச் செய்யும். ஆகையால், வைப்பு வீதங்களுக்கான இவ்வதிகரிப்பினை வாடிக்கையாளர்களுக்கு துரிதமாகக் கடத்துமாறு நிதியியல் நிறுவனங்கள் வலியுறுத்தப்படுகின்றன. மேலும், சந்தை வட்டி வீதங்களின் எதிர்பார்க்கப்படும் சரிப்படுத்தலானது *பேரண்டப் பொருளாதார மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை நிச்சயப்படுத்துவதற்கான ஆறுமாத வழிகாட்டலில்* தெளிவாக விளக்கப்பட்டவாறு அதிகரித்த சந்தைக் கோரல்களூடாக மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல்களின் உரித்துக்கள் குறைவடைவதற்கும் வசதியளிக்கும். அதேவேளை, இருபுடை ஒழுங்கேற்பாடுகள் அத்துடன் நட்பு நாடுகளுடனான வேறு இறக்குமதி நிதியளித்தல் ஒழுங்கேற்பாடுகள் என்பவற்றின் ஊடாக எதிர்பார்க்கப்படும் வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் நடந்தேறுதல், எதிர்வரவுள்ள காலப்பகுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளில் ஆரோக்கியமான மட்டத்தினை உறுதிசெய்யுமெனவும் பொருளாதாரத்தின் வெளிநாட்டுத் துறையினை மேலும் வலிமைப்படுத்துமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

**நாணயக்கொள்கை தீர்மானம்: கொள்கை வட்டி வீதங்கள் அதிகரித்துள்ளன மற்றும் நியதி ஒதுக்கு விகிதம் மாற்றமடையவில்லை**

| | |
|---|---|
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 5.50% |
| துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 6.50% |
| வங்கி வீதம் (துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்துடன் தன்னிச்சையாக சீர்படுத்தப்பட்டது) | 9.50% |
| நியதி ஒதுக்கு விகிதம் | 4.00% |

**தகவல் குறிப்பு:**

ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் அவர்களின் தலைமையிலான ஊடக மாநாடு இலங்கை மத்திய வங்கியின் கேட்போர் கூடத்தில் 2022 சனவரி 20 அன்று மு.ப. 11.00 மணிக்கு நடைபெறுவதுடன் முகநூல் மற்றும் யுடிப் (YouTube) என்பவற்றின் வாயிலாக நேரலையாகவும் இடம்பெறும்.

நாணயக் கொள்கை மீதான அடுத்த கிரமமான அறிக்கை 2022 மாச்சு 08ஆம் நாளன்று வெளியிடப்படும்.

## இணைப்பு I

### அட்டவணை 01: உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி (தற்காலிகமானவை)

| பொருளாதார நடவடிக்கைகள் | ஆண்டிற்கு ஆண்டு % மாற்றம் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2020 | | | | | 2021 | | | |
| | முதலாம் காலாண்டு | இரண்டாம் காலாண்டு | மூன்றாம் காலாண்டு | நான்காம் காலாண்டு | வருடாந்தம் | முதலாம் காலாண்டு | இரண்டாம் காலாண்டு | மூன்றாம் காலாண்டு | முதல் ஒன்பது மாதங்கள் |
| வேளாண்மை | -6.5 | -8.2 | 3.1 | 1.3 | **-2.4** | 6.3 | 8.5 | 1.7 | **5.3** |
| கைத்தொழில்கள் | -7.9 | -23.1 | 0.6 | 1.3 | **-6.9** | 5.5 | 22.1 | -2.1 | **6.8** |
| பணிகள் | 2.9 | -12.9 | 2.1 | 1.9 | **-1.5** | 3.0 | 7.5 | -1.6 | **2.7** |
| மொ.உ.உற்பத்தி | **-1.8** | **-16.4** | **1.3** | **1.3** | **-3.6** | **4.3** | **12.3** | **-1.5** | **4.4** |

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

### அட்டவணை 02: பணவீக்கம்

| மாதம் | | மே 21 | யூன் 21 | யூலை 21 | ஓகத் 21 | செத் 21 | ஒத் 21 | நவெ 21 | திசெ 21 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| முதன்மைப் பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம்) | கொநுவிசு(2013=100) | 4.5 | 5.2 | 5.7 | 6.0 | 5.7 | 7.6 | 9.9 | 12.1 |
| | தேநுவிசு(2013=100) | 6.1 | 6.1 | 6.8 | 6.7 | 6.2 | 8.3 | 11.1 | - |
| மையப் பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம்) | கொநுவிசு(2013=100) | 3.2 | 3.2 | 3.7 | 4.1 | 5.0 | 6.3 | 7.0 | 8.3 |
| | தேநுவிசு(2013=100) | 4.2 | 4.1 | 4.4 | 4.7 | 4.8 | 7.2 | 8.8 | - |

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

## அட்டவணை 03: நாணயத்துறை அபிவிருத்திகள் (தற்காலிகமானவை)

| குறிகாட்டி | வெளிநின்ற தொகை (ரூ.பில்லியன்) | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மாச் 21 | ஏப் 21 | மே 21 | யூன் 21 | யூலை 21 | ஓகத் 21 | செத் 21 | ஒத் 21 | நவெ 21 |
| ஒதுக்குப் பணம் | 1,029 | 1,031 | 1,036 | 1,065 | 1,064 | 1,089 | 1,296 | 1,286 | 1,288 |
| விரிந்த பணம் ($M_{2b}$) | 9,839 | 9,947 | 10,033 | 10,165 | 10,304 | 10,514 | 10,488 | 10,582 | 10,546 |
| தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் | (430) | (431) | (429) | (481) | (699) | (701) | (722) | (837) | (906) |
| தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் | 10,269 | 10,378 | 10,462 | 10,646 | 11,003 | 11,215 | 11,210 | 11,418 | 11,452 |
| அரசிற்கான தேறிய கொடுகடன் | 5,005 | 4,965 | 5,024 | 5,195 | 5,513 | 5,682 | 5,792 | 5,923 | 6,074 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடன் | 1,098 | 1,093 | 1,113 | 1,132 | 1,141 | 1,137 | 1,123 | 1,194 | 1,185 |
| தனியார் துறைக்கான கொடுகடன் | 6,388 | 6,446 | 6,501 | 6,585 | 6,661 | 6,796 | 6,825 | 6,860 | 6,920 |
| விரிந்த பணம் ($M_4$) | 12,010 | 12,154 | 12,265 | 12,402 | 12,563 | 12,790 | 12,742 | 12,873 | 12,862 |

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 04: வட்டி வீதங்கள்

| வட்டி வீதம் (%) | யூலை 21 முடிவில் | ஓகத் 21 முடிவில் | செத் 21 முடிவில் | ஒத் 21 முடிவில் | நவெ 21 முடிவில் | திசெ 21 முடிவில் | 2022 சனவரி 19இல் உள்ளவாறு |
|---|---|---|---|---|---|---|---|
| **மத்திய வங்கியின் முக்கிய கொள்கை வட்டி வீதங்கள்** | | | | | | | |
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 4.50 | 5.00 | 5.00 | 5.00 | 5.00 | 5.00 | 5.00 |
| துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 5.50 | 6.00 | 6.00 | 6.00 | 6.00 | 6.00 | 6.00 |
| **சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம்** | 5.10 | 5.79 | 5.94 | 5.93 | 5.92 | 5.95 | 5.95 |
| **திறைசேரி உண்டியல் விளைவு வீதங்கள் (முதலாந்தரச் சந்தை)** | | | | | | | |
| 91-நாள் | 5.22 | 5.87 | 6.70 | 8.43 | 7.53 | 8.16 | 8.49 |
| 182-நாள் | 5.23 | 5.90 | 6.99 | 8.16 | 8.02 | 8.33 | 8.44 |
| 364-நாள் | 5.25 | 5.93 | 7.01 | 8.18 | 8.16 | 8.24 | 8.48 |
| **கடன்வழங்கல் வீதங்கள்** | | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதம் (வாராந்தம்) | 5.76 | 6.01 | 6.42 | 7.82 | 8.00 | 8.61 | 8.58 (அ) |
| சராசரி நிறையேற்றப்பட்ட கடன்வழங்கல் வீதம் | 9.45 | 9.38 | 9.37 | 9.49 | 9.79 | - | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன்வழங்கல் வீதம் | 8.09 | 8.04 | 8.14 | 8.78 | 9.18 | - | - |
| **வைப்பு வீதங்கள்** | | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் | 4.77 | 4.75 | 4.75 | 4.79 | 4.82 | 4.94 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதம் | 5.67 | 5.62 | 5.64 | 5.70 | 5.75 | 5.94 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம் | 4.99 | 5.19 | 5.53 | 5.96 | 6.27 | - | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய நிலையான வைப்பு வீதம் | 5.15 | 5.35 | 5.69 | 6.19 | 6.52 | - | - |

(அ) 2022 சனவரி 13 அன்று முடிவடைகின்ற வாரத்திற்கானது

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*